**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

**அசல் வழக்கு எண்.213/2021 conneted with OS-198/2019**

2023 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 06-ம் நாள் செவ்வாய்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு.T. சோழவேந்தன் B.A.,B.L.., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு பிராமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி : | 06.06.2023 | கணவர் பெயர் : | கோவிந்தராஜ் |
| பெயர் : | சித்ராதேவி<br>(PW- 1 chief ) | தாலுக்கா : | சீர்காழி |
| கிராமம் : | நாச்சியார்கோயில் | சமயம் : | |
| சாதி : | | வயது : | 47 /2023 |
| தொழில் : | | | |

**<u>முதல் விசாரணை : 06.06.2023.</u>**

நான் அசல் வழக்கு எண். 213/2021 மற்றும் அசல் வழக்கு எண். 198/2019-ல் 2-ம் வாதி ஆவேன். மேற்படி இரு வழக்கையும் Joint trial அக 23.02.2023-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படி நான் நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். எனது சத்திய பிரமான வாக்குமுலத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் நிருபண வாக்குமூலத்தில் உள்ள அனைத்து விபரங்களும் எனக்கு தெரியும் வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

10.05.1978-ல் எனது தகப்பனார் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுகிடையே ஏற்பட்ட பாக பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 21.12.2009-ல் தாவா சொத்தை 1-ம் பிரதிவாதி 2-ம் பிரதிவாதி பெயரில் எழுதிக்கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 30.04.2009 தேதியிட்ட தாவா சொத்தை பொறுத்து வில்லங்க சான்றின் கணினி நகல் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.3 ஆக குறயீடு செய்யப்படுகிறது.**

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிது.